நிர்வாக சுருக்கம்
(சமூக காப்பக அறிக்கை கடன் எண்:3365 IND)

பவர் கிரிட் கார்போரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் (பவர்கிரிட்) இந்திய நாட்டின் மத்திய மின் தொடரமைப்பு (பயன்பாடு) நிறுவனமானது மாநிலங்களுக்கு இடையே மின் தொடரமைப்பை உருவாக்குகிறது. பசுமை மின்பாதை மற்றும் மின் சுற்று பாதைகளை வலுபடுத்துதல் (திட்டம்) மூலமாக மரபுசாரா மின்சாரத்தை எடுத்துச் செல்லவும், மேலும் பிராந்தியங்களுக்கு இடையே மின் பகிர்மானதை வலுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்துணைத்திட்டமானது இந்தியாவின் பசுமை மின்பாதை அமைப்பின் முயற்சி மற்றும் மரபு சாரா சக்தியை உறுதி செய்யவும், மேலும் தெற்கு மற்றும் மேற்கு பிராந்தியங்களுக்கு இடையே மின் பகிர்மானத்தை அதிகரிக்க வழிவகை செய்கிறது.

ஆசிய வளர்ச்சி வங்கி இத்திட்டத்திற்கு ஆதரவு அளித்து கடனாக $1000 மில்லியன் ( $500 மில்லியன் இறையாண்மை கடன் எண்: 3365 IND மற்றும் $500 மில்லியன் இறையாண்மையில்லா கடன் எண்: 3365 IND) வழங்கியுள்ளது. இக்கடன் 22.03.17 மற்றும் 24.11.17 முதல் 30.6.21 மற்றும் 31.08.21 வரை பயனுள்ளதாக இருக்கும்.

இத்திட்டமானது மேலும் பல துணை திட்டங்களை உள்ளடக்கிய மின்பாதைகள் மற்றும் துணை மின் நிலையங்களை 5 மாநிலங்களில் குறிப்பாக சட்டிஸ்கர், தமிழ்நாடு, கேரளா, இராஜஸ்தான் மற்றும் பஞ்சாப்பில் அமையவுள்ளது. மேலும் இத்திட்டம் 1216 கி.மீ. மின் பாதை மற்றும் பல்வேறு மின் அழுத்தங்களுக்கு (765KV/400KV/320KV, VSC Based HVDC) 05 புதிய துணை மின் நிலையங்களை உள்ளடக்கியது. ( ± 800KV HVDC முனையங்களை ராய்கூர் மற்றும் புகலூர், ± 320KV HVDC முனையங்களை புகளூர் மற்றும் வடக்கு திருச்சூர் மற்றும் 765KV/400KV பிகாநெர் துணை மின் நிலையத்தை இணைக்கிறது).

இத்திட்டமானது பவர்கிரிட்டின் சுற்றுசூழல் மற்றும் சமூக கொள்கையின் அடிப்படையிலும் (ESPP) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் பாதுகாப்பு கொள்கை 2009-ன்படி செயல்படுத்தப்படும். மேலும் கடனுக்குடனான

நிபந்தனைகளும், பாதுகாப்பு நகல் (IEE/CPTD/EMP) வெளியீட்டின்படி இத்திட்டம் ADB'S SPS படி சுற்று சூழல் வகை 'B' என வரையறுக்கப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள இரண்டாவது அரையாண்டு பாதுகாப்பு கொள்கை ஆய்வறிக்கை (Jan-June 2018) கடன் ஒப்பந்தத்தின் ஒரு அங்கமாக அறிக்கையை ஏற்று கொண்டுள்ளோம்.

அனைத்து முயற்ச்சிகளும் எடுத்ததின் பயனாக சிறிதளவு சமூக தாக்கம் ஏற்படும் வகையில் 5 துணை மின் நிலைய இடங்கள் அமையவிருக்கின்றன. மொத்த தேவையான 411.36 ஏக்கர் நிலத்தில் 266.46 ஏக்கர் அரசு நிலங்களாகும். இந்த திட்டத்தால் எந்த தனி நபர் மற்றும் சமூகமோ பாதிக்காமல் நிலங்களை Power Grid கையகப்படுத்தியுள்ளது. மீதம் உள்ள 144.9 ஏக்கர் நிலங்களை புகளூர் HVDC முனையங்களுக்கு (For 800KV/±370KV) தனியாரிடமிருந்து அவர்கள் சுய விருப்பத்தின்படி கையகப்படுத்தியுள்ளோம். மேலும் தனிநபர் யாரும் பாதிப்படையாததால் மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு இத்திட்டத்திற்க்கு தேவையில்லை.

நில கையகபடுத்தும் சட்டப்படி மின் தொடர் கோபுரம் அமைக்க நிலம் கையகப்படுத்த தேவையில்லை. ஆனால் இந்திய மின்சார சட்டம் 2003 மற்றும் இந்திய தந்தி சட்டம் 1885ன் படி தகுந்த நிலத்திற்க்கு நஷ்ட ஈடு தருகிறது. பவர் கிரிட் எல்லா வழிகளையும் கையாண்டு பயிர் மற்றும் மர சேதாரத்தை குறைத்தும், சேதாரம் ஏற்படின் அதற்குண்டான நஷ்டஈட்டை அந்தந்த துறையின் பரிந்துறையின் பேரில் நஷ்ட ஈட்டை நில உரிமையாளருக்கு வழங்குகிறது. இதன் அடிப்படையில் ஜுன்-2018 வரையில் 1896 நில உரிமையாளருக்கு 788.96 ஹெக்டேரில் ஏற்பட்ட மகசூல் நஷ்டத்திற்கு ரூபாய் 38.10 மில்லியன் ( Rs.17.37 மில்லியன் Foundation-க்கும் ரூபாய் 17.95 மில்லியன் மின் கோபுர கட்டுமானத்துக்கும் ரூபாய் 2.78 மில்லியன் Stringing) வழங்கியுள்ளோம். அதே போல் ஜுன் 18 வரையில் 277 மரங்களுக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.0.74 மில்லியன் வழங்கியுள்ளோம். மேலும் மத்திய மின் அமைச்சகம் அறிக்கை நாள் 15.10.15-ன்படி மின் கோபுரம் அமைத்த இடத்திற்கும் மற்றும் மின் பாதையில் வரும் நிலங்களுக்கு உரிய நஷ்ட ஈட்டை மாநில அரசின் வழிகாட்டுத்தலின்படி வழங்கப்படும்.

இத்திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகளை அறிய EMP-ல் பட்டியலிடப்பட்டு ஒப்பந்த ஆவணமாகவும் ஒவ்வொரு நிலையிலும் கண்காணிக்கப்படும். வேறு எந்த பாதிப்புகளும் EMP-ல் பட்டியியலில் உள்ளதை தவிர்த்து எந்த பாதிப்பும் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. இதுவரையில் எந்த ஒரு புகாரும் வந்ததில்லை.

இரண்டடுக்கு குறை தீர் முறையில் குறைகளை தெரியப்படுத்தவும்/சரி செய்யவும் பவர்கிரிட் திறன்பட செயல்படுகின்றது. அனைத்து குறைகளும் (மிக சிறிய குறைகளும்) பதிவு செய்தும், மறு ஆய்வு செய்தும் குறிப்பிட்ட கால கெடுக்குள்ளாக தீர்க்கப்படுகிறது. மேலும் பயிர் மற்றும் மர நஷ்ட ஈட்டு தொகையினை வழங்கியபின் விவசாயிகளின் குறைகளை பவர்கிரிட் கேட்டறிந்து உடனடி தீர்வு காண்கிறது.

பவர்கிரிட் திட்டத்தின்படி ஆரம்ப முதல் அனைத்து முயற்சிகளையும் கையாண்டு மிக சிறிய அளவினான சேதத்தின் மூலம் அனைத்து துணை மின் நிலையங்களையும் முடிக்க உள்ளது. பொது மக்களின் முன்னேற்றத்திற்கு பவர்கிரிட் அனைத்து உதவிகளையும் மக்களின் மேம்பாட்டிற்க்காக நிர்வாக சமூக பொருப்புகளின்படி துணை மின் நிலையங்கள் மற்றும் மின்பாதைகள் சுற்றியுள்ள கிராம பகுதிகளுக்கு தேவையான சமூக வளர்ச்சிக்கு அனைத்து உதவிகளையும் பவர்கிரிட் செய்து தருகிறது. இப்பொழுது செய்யப்பட்டுள்ள உள் கட்டமைப்பு, மேம்பாடு, சமூக பொருளாதார நீண்ட வளர்ச்சிக்கு அறிகுறியாகவும் மற்ற அனைத்து தடைகளையும் உடைந்தெறிந்து இத்திட்டம் செயல்படும்.